# ஊனமுற்றோரை கல்வி மற்றும் தொழில் ரீதியாக பலப்படுத்துவதில் அரசாங்க நிறுவனங்களின் பங்களிப்பு



அறிக்கை இல. : பீஎஸ்/பீ/எஸ்எஸ்/2015/1

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுப் பிரிவு

# உள்ளடக்கம்


| தொடர் இல. | | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|
| 1. | | நிறைவேற்றுப் பொழிப்பு | 1 |
| 2. | | அறிமுகம் | 3 |
| | 2.1 | கணக்காய்வின் நோக்கெல்லை | 3 |
| | 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 4 |
| | 2.3 | தலைப்பினை தெரிவுசெய்வதற்கான காரணம் | 4 |
| | 2.4 | கணக்காய்விற்கான பிரவேசம் | 4 |
| | 2.5 | கணக்காய்வின் குறிக்கோள்கள் | 4 |
| 3. | | விரிவான கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரை | 5 |
| | 3.1 | ஊனமுற்ற பிள்ளைகளிற்காக வழங்கப்படும் கல்வி | 5 |
| | 3.1.1 | அரசாங்க பாடசாலைகளிலுள்ள விஷேட கல்விப் பிரிவு தொடர்பான அவதானிப்புக்கள் | 5 |
| | 3.1.2 | விஷேட பாடசாலைகள் தொடர்பான அவதானிப்புக்கள் நிறுவனத்தின் கருத்துரைகள் (கல்வி அமைச்சு) | 6 |
| | 3.2 | ஊனமுற்றோர்களிற்காக வழங்கப்படுகின்ற தொழிற் பயிற்சி தொடர்பான அவதானிப்புக்கள் | 14 |
| | 3.2.1 | தொழிற் பயிற்சி கல்வியினை வெற்றிகரமாக பூர்த்திசெய்தல் | 14 |
| | 3.2.2 | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை | 14 |
| | 3.2.3 | பயிற்சியினை பூரணப்படுத்திய மாணவர்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை | 15 |
| | 3.2.4 | நிதி ஏற்பாடுகள் | 15 |
| 4. | | முடிவுரை | 16 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

வாழ்க்கை பாதையின் பல்வேறு தடைகளை கடந்து பயணிக்கின்ற மனிதனின் பாரிய திருப்புமுனையாக அமைவது திருமணமாகும். மணம் முடித்த ஒவ்வொரு தம்பதியினரதும் பிரதான குறிக்கோளாக காணப்படுவது ஆரோக்கியமும் அறிவும் படைத்த குழந்தைகளை ஈன்றெடுத்து அவர்களை நல்லொழுக்கமும், பண்பாடும் கொண்ட நற்பிரசைகளாக சமூகத்திற்கு வழங்குவதாகும். இருப்பினும், சுகாதார பிரச்சினைகள் அல்லது தவிர்க்க முடியாத ஏனைய காரணங்களால் சில சந்தர்ப்பங்களில் குறைபாடுகளுடன் கூடிய குழந்தைகள் இவ்வுலகில் பிறக்கின்றன. அவ்வாறான குறைகள் காணப்பட்ட போதிலும், அவர்களும் சமூகத்திலுள்ள ஏனைய உறுப்பினர்களைப் போன்று சம அந்தஸ்த்துள்ளவர்களாக கருதப்பட வேண்டியவர்களாவர். ஆகையால், அவர்களது சுபீட்சத்திற்காக அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறான பிள்ளைகளை சமூகத்திலுள்ள ஏனைய தரப்பினர்களுடன் சம மட்டத்தில் வைத்திருப்பதன் பொருட்டு சிறு பராயத்தில் கல்வி திறன்களையும் வாலிபத்தில் தொழில்சார் திறன்களையும் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தினால் அப் பணி பிரதானமாக கல்வி அமைச்சு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் தொழிற்பயிற்சி பாடசாலைகளின் ஊடாக நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊனமுற்ற பிள்ளைகளிற்காக வழங்கப்படுகின்ற சுகாதார வசதிகள் மற்றும் கல்வி போதியதாக காணப்படுகின்றதா என்பதனையும் கல்வியின் பின்னர் அவர்கள் தொழிலில் ஈடுபடக்கூடிய அல்லது சுயதொழிலில் ஈடுபடுவதற்கு முடியுமான விதத்தில் போதிய தொழிற்பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதனையும் மதிப்பீடு செய்வதே கணக்காய்வின் குறிக்கோளாகக் காணப்பட்டது.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த விசேட கல்வி ஆசிரியர் பயிற்சியினை பெற்றிருந்த ஆசிரியர்கள் அச் சேவையில் ஈடுபடாது ஊனமற்ற ஏனைய பிள்ளைகள் காணப்படுகின்ற வகுப்பறைகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல், விசேட கல்வி ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவு எண்ணிக்கையில் காணப்படுதல், விசேட கல்விப் பிரிவுகளிற்கு நுழைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வசதிகள் போதியளவில் இல்லாமை மற்றும் கல்வி சுகாதார உபகரணங்கள் போதியளவில் இல்லாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அரசாங்க விசேட பாடசாலைகளைக் கருத்திற்கொள்கையில் சைகை மொழியினை பயன்படுத்துகின்ற பிள்ளைகளிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சைகை மொழி முறையொன்று காணப்படாமை, ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணப் பரீட்சைகளிற்காக தோற்றுகின்ற மாணவர்களிற்கு வினாப்பத்திரங்களை வாசிப்பதற்காக பங்குபற்றுகின்ற ஆசிரியர்கள் விசேட கல்வி பயின்ற ஆசிரியர்களான போதிலும், அவர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்களாக கடமையாற்றும் பாடங்கள் தொடர்பில் அறிவின்மை காரணமாக பிரச்சினைகள் ஏற்படுதல்,சைகை மொழியினை பயன்படுத்துகின்ற பிள்ளைகள் தமக்குரிய பாடத்திட்டத்தினை எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் பூரணப்படுத்தியிருக்காமை, பரீட்சை பெறுபேறுகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

விழிப்புலனற்ற மாணவர்களிற்கு பிரேல் (Braille) மொழியில் பாடப் புத்தகங்கள் கிடைத்திருந்த போதிலும்,வரைபடங்களை பிரேல் (Braille) மொழியில் சமர்ப்பிக்க முடியாமை,

வரைபடங்களின் மூலம் வழங்கப்படுகின்ற வினாக்களிற்கு விடையளிப்பதற்கு முடியாமை,வினாப்பத்திரங்களை வாசிப்பதற்காக பங்குபற்றுகின்ற வருகைதருகின்ற ஆசிரியர்களிற்கு பிள்ளைகள் தொடர்பிலும் பாடங்கள் சம்பந்தமாகவும் அறிவின்மை காணரமாக அது பிள்ளைகளிற்கு பிரதிகூலமாக தாக்கமளித்திருந்தமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மேற்படி அவதானிப்புக்களிற்கு மேலதிகமாக ஆசிரிய ஆலோசகர்கள் வருகைதராமை, அவ்வப்போது இடம்பெறுகின்ற பாடத்திட்ட மாற்றங்கள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் போன்வற்றிற்கு விசேட கல்விப் பிரிவுகளிலுள்ள மற்றும் விசேட பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை பங்குபெறச் செய்தல் போதியளவில் காணப்படாமை, ஆசிரியர் வழிகாட்டல் கோவைகள் கிடைக்கப்பெறாமை, உதவியாளர் பதவியணி போதுமானதாக இல்லாமை போன்றன விசேட பாடசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஏனைய அவதானிப்புக்களாகும்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் தொழிற்பயிற்சி பாடசாலைகளிற்கு சேர்த்தக்கொள்ளப்படுகின்ற மாணவர்கள் இடைநடுவே பாடநெறிகளை கைவிடுதல், பாடநெறிகளை பூர்த்திசெய்த மாணவர்களின் தொழில்கள் தொடர்பான உறுதியான தகவல்கள் சமூக சேவைகள் திணைக்களத்திடம் காணப்பட்டிருக்காமை போன்ற விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் படி பாடசாலைகளில் விசேட கல்விப் பிரிவுகளை தாபிக்கையில் மாணவர்களிற்கு நுழைவு வசதிகளை ஏற்படுத்துதல், செவிப்புலனற்ற பிள்ளைகளிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சைகை மொழிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், விசேட கற்பித்தல் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ள ஆசிரியர்களை ஏனைய வகுப்பறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக விசேட கல்விப் பிரிவுகளிற்குரிய பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், ஆசிரியர் கற்பித்தல் வழிகாட்டல்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். விசேட பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களிற்கு பாடத்திட்டங்களின் மாற்றம் போன்ற விசேட நிலைமைகள் தொடர்பில் கட்டாயமாக அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், பகிரங்க பரீட்சைகளின் போது விசேட தேவையுள்ள பிள்ளைகளிற்கான வினாப்பத்திரங்களை வாசிப்பதற்காக அப் பிள்ளைகளின் விசேட தேவைகள் தொடர்பிலும் பாட விடயங்கள் தொடர்பிலும் அறிவுபடைத்த ஆசிரியர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தினால் அதற்குரிய தொழிற்பயிற்சிப் பாடசாலைகளில் காணப்படுகின்ற தேவைகளை ஆய்ந்தறிந்து அவற்றை தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் பயனுள்ளவையா என்பதனை மீண்டும் கருத்திற்கொண்டு கற்பித்தலுக்காக செலவிடப்பட்ட கிரயத்துடன் ஒப்பிடுகையில் ஊனமுற்ற மாணவர்கள் தொழில்களில் ஈடுபடுதல் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை மதிப்பீடு செய்வதற்கான முறையொன்றை தயாரித்துக் கொள்ளல் போன்ற விடயங்களின் பால் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

## 2. அறிமுகம்

ஊனமுற்றவர் என்பவர் பிறப்பினால் அல்லது பிறப்பாலன்றி ஏற்பட்ட உடல் அல்லது உளரீதியான இயலுமைகளின் குறைபாட்டு விளைவால் வாழ்வதற்கான தேவைகளை முழுமையாவோ அல்லது பகுதியளவிலோ தன்னால் சுயமாக நிறைவேற்ற முடியாதுள்ள ஆளொருவர் என்பது அர்த்தமாகும்.

இந்த ஊனமுற்ற நபர்களும் சமூகத்தில் சம அந்தஸ்த்துள்ளவர்களாவதுடன், அவர்களிற்குரிய சமூகத்தில் அவர்களிற்கு சம உரிமை கிடைத்தல் வேண்டும். அதாவது, கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, நுழைவு வசதிகள். நலனோம்பல்கள் மற்றும் ஏனைய எந்தவொரு தேவையும் மற்றவர்களிற்கு வழங்கப்படுவதனைப் போன்று சம அளவில் வழங்கப்படுதல் வேண்டுமென்பது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வி சகல பிள்ளைகளினதும் அடிப்படை உரிமையாகும் என்பது, 1948 இன் மனித உரிமைகள் தொடர்பான விசேட பிரகடனத்தினாலும், 1989 இன் சிறுவர் உரிமைகள் சட்டத்தினாலும் 04 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, உடல் அல்லது உள ரீதியான பாதிப்புக்களினால் பீடிக்கப்பட்ட சிறுவர்களிற்கும் ஏனைய பிள்ளைகளைப் போன்று சமமான கல்வியினை பெற்றுக்கொடுப்பதற்காக கல்வி அமைச்சும் அவ்வாறே மாகாண கல்வித் திணைக்களங்களும் பங்களிப்புச் செய்கின்றன.

1944 யூலை 10 ஆந் திகதி நியமிக்கப்பட்ட கலாநிதி ஐவர் ஜெனின்க்ஸ் ஆணைக்குழுவின் எனை ஆவது கூட்டத்தொடரின் பரிந்துரையின் பிரகாரம், 1948 பெப்ரவரி 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஊனமுற்றோர்களிற்கு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கை ஊனமுற்றோர் இயக்கத்தினால் ஊனமுற்றோர்களிற்கான கொள்கையொன்றை தயாரிக்குமாறு பல ஆண்டுகளாக அரசாங்கத்திடம் கோரிவந்திருந்தமையின் விளைவாக அப்போதைய சமூக சேவைகள் அமைச்சரினால் 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோர்களிற்கான தேசிய கொள்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அது ஊனமுற்றோர்களிற்கான உரிமைகளிற்கு சட்டரீதியான அதிகாரத்தினை பெற்றுத்தருவதற்காகும்.

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இச் செயலாற்றல் கணக்காய்வு பின்வரும் துறைகளில் மேற்கொள்ளப்பட்டது.

(அ) அரசாங்க பாடசாலைகளில் ஊனமுற்ற பிள்ளைகளிற்காக வழங்கப்படுகின்ற விசேட கல்வி தொடர்பில் பரிசோதிக்கையில் இலங்கையின் ஊனமுற்ற பிள்ளைகளிற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள, கல்வி அமைச்சின் கீழியங்கும் நாடுமுழுவதிலுமுள்ள 25 நிவாரணப் பாடசாலைகள் தொடர்பில் கணக்காய்வின் போது கருத்திலெடுக்கப்பட்டது. அவ்வாறே, மேல் மாகாண திணைக்களத்தின் கீழுள்ள வலய அலுவலகங்கள், கொத்தணி கல்வி அலுவலகங்களின் விசேட கல்விப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

(ஆ) ஊனமுற்றோர்களிற்கு வழங்கப்படுகின்ற தொழிற்பயிற்சி தொடர்பான பரிசோதனையின் போது சமூக சேவைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின்

கீழுள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டன.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.3 தலைப்பினை தெரிவுசெய்வதற்கான காரணம்

பிறப்பினால் அல்லது பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக அல்லது பல்வேறுபட்ட சுற்றாடல் தாக்கங்கள் காரணமாக ஊனமுற்ற நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றோர் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றமை வருடாந்த புள்ளிவிபரங்களை பரிசோதிக்கையில் காணக்கிடைக்கின்றது. இவ்வாறு ஊனமுற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மக்களிற்கும் சமூகத்திலுள்ள ஏனையோருக்கு கிடைக்கின்ற சகல உரிமைகளும் கிடைத்தல் வேண்டும். ஆகையால், இவ்வாறான நபர்களிற்காக அரசாங்க மட்டத்தில் பாரியளவு பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

ஊனமுற்ற பிள்ளைகளின் கல்விக்காக கல்வி அமைச்சும், மாகாண கல்வித் திணைக்களங்களும் அவ்வாறே ஊனமுற்றவர்களிற்காக வாழ்க்கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி அவர்களை சமூக அபிவிருத்தியில் உண்மையான பங்குதாரர்களாக உருவாக்குவதற்கு சமூக செவைகள் அமைச்சும் மாகாண சமூக சேவை திணைக்களங்களும் பிரதானமாக செயற்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களினால் ஊனமுற்ற சமூகத்தினருக்காக வருடந்தோரும் பெருமளவு தொகை செலவிடப்படுவதுடன், அச் செலவினத்தினடுன் ஒப்பிடுகையில் ஊனமுற்றோருக்கு சமூகத்தில் பெறுமதியும், ஏற்றுக்கொள்ளப்படுதலும், தனித்துவமும் மிக்கதாக சமூக அபிவிருத்தியில் உண்மையான பங்குதாரர்களாக வாழ்வதற்கு முடிந்துள்ளதா என்பதனை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக இத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 2.4 கணக்காய்விற்கான பிரவேசம்

கணக்காய்வு பிரவேசத்திற்காக கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் கருத்திலெடுக்கப்பட்டன.

- 2003 இன் 33 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்ற நபர்களிற்கான உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரச்சட்டம்.
- 2003 இன் ஊனமுற்ற நிலை தொடர்பான தேசியக் கொள்கை
- விசேட கல்வி தொடர்பில் கல்வி அமைச்சினாலும் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தினாலும் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்

- தொடர்புடைய ஏனைய ஆவணங்களை மீளாய்வு செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்

## 2.5 கணக்காய்வின் குறிக்கோள்கள்

இந்த செயலாற்றல் கணக்காய்வின் அடிப்படைக் குறிக்கோள் யாதெனில், ஊனமுற்ற நபர்களிற்கு சமூகத்தில் ஏனைய தரப்பினர்களிற்கு கிடைக்கின்ற சகல உரிமைகளும் கிடைக்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்வதாகும். அதாவது ஊனமுற்ற சிறு பிள்ளைகளிற்கு விசேட கல்வியும் அதன்பின்னர் வாழ்க்கைத்தொழில் கல்வியும் ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் வழங்கப்படும் செயலாற்றலை மதிப்பிடுவதாகும்.

## 3. விரிவான கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரை

## 3.1 ஊனமுற்ற பிள்ளைகளிற்காக வழங்கப்படுகின்ற கல்வி

ஊனமுற்ற பிள்ளைகளின் கல்வி, முறைப்படியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைக்கும் அமைய உளவியல் ரீதியான கோட்பாடுகளை உச்ச அளவில் கருத்திற்கொண்டு வழங்கப்படுதல் வேண்டும். அதற்காக மனித மற்றும் பௌதீக வளங்களும் பொருத்தமான சுற்றாடலும் தேவைப்படுகின்றது. இவ்வாறான கல்வி முறையின் ஊடாக ஊனமுற்ற பிள்ளைகளை சமூகமயப்படுத்தும் குறிக்கோளை படிப்படியாக அடைந்துகொள்ள முடியும்.

### 3.1.1 அரசாங்க பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகள் தொடர்பான அவதானிப்புக்கள்

(அ) மேல் மாகாணத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் காணப்படுகின்ற 25 கல்விப் பிரிவுகள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகள் மற்றும் அப் பிரிவுகள் தொடர்பில் கொத்தணி மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி மனித மற்றும் பௌதீக வளங்கள் போதுமானதாக காணப்படாத நிலைகள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அதாவது, 15 பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகளிற்கு நுழைவு வசதிகள் காணப்படாமை, 13 பாடசாலைகளில் கற்பித்தல் உபகரணங்கள் இல்லாமை, 19 பாடசாலைகளில் கட்டிடங்களும் கழிவறை வசதிகளும் காணப்படாமை மற்றும் 4 பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாமை உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை.
பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகளில் தேவையான ஆசிரிய ஆலோசகர்களிற்கான அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை காணப்படாதிருந்ததுடன், மேல் மாகாணத்திலுள்ள 38 வலயக் கல்விப் பிரிவிலுள்ள 171 விசேட கல்விப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கை 17 ஆக காணப்பட்டதுடன், 11 கொத்தணி கல்விப் பிரிவுகளிலுள்ள விசேட கல்வியுடன் சம்பந்தப்பட்ட பணிப்பாளர்கள் 03 கொத்தணி கல்விப் பரிவுகளில் பதிற்கடமை அடிப்படையில் கடமையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| வலயம் | விசேட கல்விப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை | வலயத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | 2015 மே 13 ஆந் திகதியில் உள்ளவாறு | |
| கொழும்பு | 16 | 02 |
| ஜயவர்தனபுர | 14 | 02 (பதிற்கடமை) |
| பிலியந்தல | 17 | 01 |
| ஹோமாகம | 11 | 01 (பதிற்கடமை) |
| கம்பஹ | 10 | 02 |
| மினுவன்கொட | 15 | 02 |
| களனிய | 17 | 02 |
| நீர்கொழும்பு | 19 | 02 |
| களுத்துறை | 16 | 02 |
| மதுகம | 20 | 01(பதிற்கடமை) |
| ஹொரண | 16 | இல்லை |

### 3.1.2 விசேட பாடசாலைகளுடன் சம்பந்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள்

விழிப்புலனற்ற, செவிப்புலனற்ற மற்றும் ஏனைய உபாதைகளிற்கு உட்பட்ட பிள்ளைகளிற்கு கல்வியினை வழங்குவதற்காக நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ள 25 விசேட பாடசாலைகள் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) விசேட கல்விப் பிரிவுகள் மற்றும் விசேட பாடசாலைகளின் கற்பித்தல்**

மேல் மாகாணத்தினுள் விசேட தேவையுள்ள பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் அதிகமான மாணவர்கள் விசேட பாடசாலைகளில் கல்வி கற்கின்றமை பின்வரும் அட்டவணைக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

| வலயம் | அரசாங்க பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகளின் எண்ணிக்கை | அப் பிரிவுகளில் கல்விபயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | விசேட பாடசாலைகளின் எண்ணிக்கை | அப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 2014 ஆம் ஆண்டு | | | |
| கொழும்பு | 13 | 95 | 01 | 272 |
| ஜயவர்தனபுர | 13 | 97 | 02 | 55 |
| பிலியந்தல | 09 | 60 | 02 | 190 |
| ஹோமாகம | 13 | 82 | - | - |
| கம்பஹ | 11 | 156 | 02 | 196 |
| களனிய | 16 | 122 | - | - |
| மினுவன்கொட | 16 | 122 | - | - |
| நீர்கொழும்பு | 17 | 128 | 01 | 197 |
| ஹொரண | 19 | 208 | 01 | 54 |
| களுத்துறை | 15 | 157 | 01 | 105 |
| மதுகம | 17 | 77 | 01 | 33 |

இப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக கூடிய கரிசனம் தொடர்புடைய நிறுவனங்களால் செலுத்தப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களிற்கமைய அவதானிக்கப்பட்டது.

**(i) பாடத் திட்டங்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்களில் தொடர்புடைய செயலமர்வுகளில் பங்குபற்றாமை.**

2015 ஆம் ஆண்டு முதல் 6 ஆம் ஆண்டு மற்றும் 10 ஆம் ஆண்டிற்கான பாடத் திட்டங்கள் மாற்றமடைதல் தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் அனைத்துப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்காக நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 08 விசேட பாடசாலைகளிலுள்ள 59 ஆசிரியர்கள் அவ்வாறான நிகழ்ச்சிகளிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) ஆசிரிய ஆலாசகர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமை.**

அரசாங்கப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களிற்குத் தேவையான வழிகாட்டலிற்காக அவ்வப்போது ஆசிரிய ஆலோசகர்களின் உதவிகள் சில பாடசாலைகளிற்கு கிடைத்திருந்த போதிலும், 06 விசேட பாடசாலைகளிலுள்ள 34 ஆசிரியர்களிற்கு அவ்வாறான ஆலோசனைகள் 2014 ஆம் ஆண்டில் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) ஏனைய செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் பயிற்சிகளிற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காமை.**

விசேட பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் பாடங்கள் குறித்த அறிவை மேம்படுத்துவதற்காக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் பயிற்சிகளிற்கான சந்தர்ப்பங்கள் சகல ஆசிரியர்களிற்கும் கிடைக்கக்கூடிய விதத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, சில பாடசாலைகளிலுள்ள ஆசியர்களிற்கு இவற்றிற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் அவ்வழைப்புக்கள் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே, அவற்றில் கலந்துகொள்வதற்கான ஆர்வம் காணப்பட்ட போதிலும், அதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. அதற்கமைய, 13 விசேட பாடசாலைகளிலுள்ள 202 ஆசிரியர்களில் ஏறத்தாழ 51 பேர் மாத்திரம் கருத்தரங்குகளில் பங்குபற்றியிருந்ததுடன், செவிப்புலனற்ற பிள்ளைகளுடன் தொடர்புடைய உதட்டசைவு மொழி தொடர்பான செயலமர்விற்கு 38 ஆசிரியர்களும், ஏனைய பயிற்சிகளிற்காக 124 ஆசிரியர்களும் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர்.

**(இ) ஆசிரியர் வழிகாட்டல் கோவை கிடைக்கப்பெறாமை**

விசேட பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களிற்குத் தேவையான வழிகாட்டல்கள் (ஆசிரியர் கைநூல்) சில விசேட பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களிற்கு கிடைத்திருந்த போதிலும், 11 விசேட பாடசாலைகளிலுள்ள 51 ஆசிரியர்களிற்கு தமது பாடங்களிற்குரிய ஆசிரியர் வழிகாட்டல் கைநூல் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக கற்பித்தல் நடவடிக்கைகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாதிருந்தது.

**(ஈ) விசேட பாடசாலைகளிலிருந்து கல்வியினை பூரணப்படுத்துதல்.**

விசேட பாடசாலைகளிலிருந்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கல்வியினை பூரணப்படுததியிருந்த மாணவர்கள் வாழ்க்கைத்தொழில் கல்விக்கு நுழைதல் திருப்திகரமான அளவில் காணப்படாதிருந்தமை 25 விசேட பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலை | 2013 ஆம் ஆண்டு | | 2014 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | கல்வியினை பூரணப்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை | தொழில் கல்வியில் ஈடுபட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை | கல்வியினை பூரணப்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை | தொழில் கல்வியில் ஈடுபட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை |
| மேமா/ஸ்ரீ சுதர்ஷி விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 13 | 07 | 07 | 04 |
| அ/யசோதரா விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 07 | இல்லை | இல்லை | இல்லை |
| மேமா/கொ/சுகீத விசேட பாடசாலை | 09 | 02 | 13 | 03 |
| மேமா/மது/மயுர விசேட பாடசாலை | 01 | இல்லை | 09 | 03 |
| மேமா/சித்ரலேத் பாடசாலை | 12 | 05 | 10 | 01 |
| மஹா செங்கடகல விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 15 | இல்லை | 11 | இல்லை |
| சிலா/மஹவெவ சிவ்ராஜ் விசேட பாடசாலை | 23 | 08 | 18 | 06 |
| மேமா/நெத்சவன் சரண கனிஷ்ட வித்தியாலயம் | 05 | 04 | 08 | 06 |
| கு/சந்தகல விசேட பாடசாலை | 18 | 13 | 07 | 02 |
| | 103 | 39 | 83 | 25 |

**(உ) உதவியாளர்களின் எண்ணிக்கை போதியதாக இல்லாமை.**

மேல் மாகாண சபையின் 2006 இன் 03 ஆம் இலக்க சமூக சேவைகள் கட்டளைகளின் 12 ஆவது பிரிவின் கீழுள்ள 05 ஆவது கட்டளையின் பிரகாரம் சமூக சேவைகள் பணிப்பாளர் திருப்தியடைக்கூடிய விதத்தில் தகைமையுள்ள பதவியணியொன்று ஊனமுற்றோர் இல்லங்களிலும் நிறுவனங்களிலும் காணப்படுதல் வேண்டும். இருப்பினும், விசேட பாடசாலைகளில் எந்தவொரு உதவியாளர்களும் காணப்படவில்லை. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் அவதானிக்குட்படுத்தப்பட்ட 08 பாடசாலைகளிலுள்ள விடுதிகளில் 296 மாணவர்கள் தங்கியிருந்த போதிலும்,அங்குள்ள விடுதிகளில் எந்தவொரு உதவியாளர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பாடசாலை | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | வதிவிட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாறை/ரோஹண விசேட பாடசாலை | 123 | 59 |
| மேமா/ஸ்ரீ சுதர்ஷி விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 158 | இல்லை |
| சிலா/மஹவெவ சிவ்ராஜ் விசேட பாடசாலை | 94 | 49 |
| மேமா/கொ/சுகீத விசேட பாடசாலை | 48 | 23 |
| க/ஸ்ரீ/சந்ரசேகர விசேட பாடசாலை | 70 | 55 |
| மேமா/மது/மயுர விசேட பாடசாலை | 29 | 15 |
| கா/நெத்சவன் சரண கா. வித்தியாலயம | 60 | 40 |
| ரியன்ஸி அலகியவத்த விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 77 | 55 |
| | 659 | 296 |

**(ஊ) விசேட பாடசாலைகளிலுள்ள ஊனமுற்ற மாணவர்களின் உபகரணத் தேவையினை நிறைவேற்றாமை.**

08 விசேட பாடசாலைகளில் 2014 ஆம் ஆண்டில் கல்வி பயின்றுவந்திருந்த மாணவர்களிற்குத் தேவையான வெள்ளைப் பிரம்பு,கேட்டல் கருவி,பிரேல் கருவி போன்ற ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் பற்றாக்குறையாக காணப்பட்ட போதிலும், அவை வழங்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | பாடசாலை | 2014 ஆம் ஆண்டிற்கான தேவை | | | 2014 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வெள்ளைப் பிரம்பு | கேட்டல் கருவி | பிரேல் கருவி | வெள்ளைப் பிரம்பு | கேட்டல் கருவி | பிரேல் கருவி |
| i. | மாறை/ரோஹண விசேட பாடசாலை | 08 | 20 | 08 | - | - | - |
| ii. | மேமா/ஸ்ரீ சுதர்ஷி விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 15 | - | 12 | 10 | - | 06 |
| iii. | ர/யசோதரா விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 05 | 49 | 01 | - | - | 01 |
| iv. | கா/நெத்சவன் சரண கா. வித்தியாலயம் | - | 12 | 04 | - | 04 | 02 |
| v. | கு/சந்தகல விசேட பாடசாலை | - | 05 | 09 | - | 02 | - |
| vi. | ரியன்ஸி அலகியவத்த விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | - | - | 10 | - | - | - |
| vii. | அ/செங்கடகல விழிப்புல செவிப்புலனற்றோர் கல்லூரி | 10 | 103 | 04 | - | - | - |
| viii. | சிலா/மஹவெவ சிவ்ராஜ் விசேட பாடசாலை | - | 04 | - | - | - | - |

**(எ) செவிப்புலனற்ற மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் பலவீனமான மட்டத்தில் காணப்படுகின்றமை.**

விசேட பாடசாலைகளில் கல்வி கற்றுவருகின்ற விழிப்புலனற்ற மாணவர்களின் 5 ஆந் தர புலமைப் பரிசில் பரீட்சைமற்றும் கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை பெறுபேறுகள் திருப்தியான நிலையில் காணப்பட்ட போதிலும், செவிப்புலனற்ற மாணவர்களின் அப்பரீட்சை பெறுபேறுகள் திருப்தியான நிலையில் காணப்படவில்லை. அதற்கமைய, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 3 பாடசாலைகளின் 2014 ஆம் ஆண்டிற்குரிய பிரதான பாடங்களை பகுப்பாய்வு செய்கையில், செவிப்புலனற்ற 57 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்ததுடன், அவர்களில் 41 பேர் பரீட்சைகளில் சித்தியடைந்திருந்தனர். இருப்பினும் 109 செவிப்புலனற்ற மாணவர்கள் அப்பரீட்சைகளிற்கு தோற்றியிருந்த போதிலும், 11 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்திருந்தனர்.

இந்த நிலைமைக்கு பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) சாதாரண பிள்ளைகளிற்குரிய பாடத்திட்டத்தினை இந்தப் பிள்ளைகளிற்கும் கற்பிக்கவேண்டி ஏற்பட்டிருந்தமை. இருப்பினும், விசேட தேவைகள் காணப்பட்டிருந்தமை காரணமாக குறித்த காலப்பகுதியினுள்

பாடத்திட்டத்தினை பூரணப்படுத்துவதற்கு பிள்ளைகளிற்கு முடியாது போயிருந்தமை.

(ii) அந்தந்த விடயங்களிற்குரிய சொற் பிரயோகங்களிற்குத் தேவையான சமிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமை.

(iii) பயன்படுத்தப்படுகின்ற சமிக்கைகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டிருக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை.

**(ஏ) கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளின் போது விழிப்புலனற்ற மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

விசேட பாடசாலைகளில் கல்வி கற்றுவருகின்ற விழிப்புலனற்ற மாணவர்கள்புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சைகளின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை மற்றும் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் படங்கள், வரைபுகள், சித்திரங்கள் ஆகியவற்றின் மூலம் வினாக்கள் முன்வைக்கப்படுவதனால் அந்த வினாக்களிற்கு விழிப்புலனற்ற மாணவர்களிற்கு விடையளிக்க முடியாதிருந்தமை.

உதாரணமாக: A, B, C எழுத்துக்களிலுள்ள பகுதிகளைப் பெயரிடுக.

- இருதயத்தின் பகுதிகளை அம்புக்குறிகளின் மூலம் காண்பித்து பெயரிடுக.

(ii) விழிப்புலனற்ற மாணவர்களின் வினாப்பத்திரமானது மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னரே பிரேல் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்படுகின்றது. இதனால் அவர்களிற்கு ஏறத்தாழ ½ மணிநேரம் வீணாகின்றது. இது அவர்களின் உளவியலை பாதிக்கின்ற காரணியாகும். அவ்வாறே, வினாப்பத்திரங்கள் மாணவர்களிற்கு பகுதி பகுதியாக கிடைப்பதனால் முழுமையான வினாப்பத்திரம் தொடர்பாக ஒரே தடவையில் தீர்மானமெடுக்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

(iii) கணிதப் பாடத்திற்காக விசேட வினாப்பத்திரமொன்று வழிப்புலனற்ற மாணவர்களிற்கு வழங்கப்பட்ட போதிலும், அதற்காக பாடத்திட்டமொன்று காணப்படாமை.

(iv) பரீட்சைம ண்டபத்தில் பணிகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களிற்கு ஊனமுற்ற பிள்ளைகள் தொடர்பாக சிறந்த புரிந்துணர்வும் அறிவும் இல்லாமை. இதன் காரணமாக வினாப்பத்திரத்திலுள்ள வினாக்களை மாணவர்கள் செவிமடுக்கக் கூடியவாறு வாசிக்கையில் அதனைப் பரிந்துகொள்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றமை.

(v) சாதாரண பிள்ளைகளிற்கு வழங்கப்படுகின்ற பாடப் புத்தகங்கள் பிரேல் மொழிக்கு மாற்றப்பட்டு ஊனமுற்ற பிள்ளைகளிற்கு வழங்கப்படுகின்றது. அப் புத்தகங்களிலுள்ள வரைபடங்களை பிரேல் மொழியில் வழங்குவதற்கு முடியாதுள்ள போதிலும், வரைபடங்கள் மூலம் கேட்கப்படுகின்ற வினாக்களிற்கு பதிலளிக்க வேண்டிய நிலை ஊனமுற்ற பிள்ளைகளிற்கு ஏற்பட்டுள்ளமை.

(vi) புலமைப்பரிசில் பரீட்சையின் போது வழிப்புலனற்ற பிள்ளைகளிற்காக வினாக்களை வாசிப்பதற்கு வருகை தருகின்ற ஆசிரியர்கள் பாடம் குறித்த அறிவுடையவராக காணப்படாமையால் அது பிள்ளைகளின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றமை. அதாவது, விஞ்ஞான பாடம் தெரியாத ஆசிரியர் ஒருவர் விஞ்ஞான வினாப் பத்திரத்தினை வாசித்தல் அல்லது சங்கீதம் பாடம் தெரியாத ஆசிரியர் ஒருவர் சங்கீத பாடத்திற்கான வினாப் பத்திரத்தினை வாசித்தல் போன்ற சந்தர்ப்பங்களை உதாரணங்களாக காட்ட முடியும்.

(vii) ஊனமுற்ற பிள்ளைகளிற்கு நூலகப் புத்தகங்கள் மற்றும் ஏனைய புத்தகங்கள் வாசிப்பதனை இலகுபடுத்தவதற்காக ஸ்கேன் இயந்திரம், பிரசுர எழுத்துக்களை வாசிக்கும் இயந்திரம் (Optical Character Reader) போன்ற வன்பாகங்களுடன் கூடிய இயந்திரங்களை இணைத்து கணனி உதவியுடன் அச்சு இயந்திரம் மற்றும் கடிதங்களை வாசிக்கும் முறைகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு வாசிக்ககூடிய வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) விசேட கல்வி தொடர்பில் பயிற்சிகளைப் பெற்ற ஆசிரியர்கள் ஏனைய வகுப்பறைகள் / பாடசாலைகளிற்கு அனுப்பிவைக்கப்படுதல்**

கல்வி அமைச்சுச் செயலாளரின் E.D./1/18/8/2/6 ஆம் இலக்க 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய சுற்றறிக்கையின் மூலம் விசேட தேவையுள்ள மாணவர்களிற்காக விசேட கல்விப் பிரிவுகளை ஆரம்பித்து ஆசிரியர்களை இணைப்புச் செய்தல் தொடர்பில் அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். இருப்பினும், 2014 ஆம் ஆண்டில் 09 மாகாணங்களில் காணப்பட்ட விசேட கல்வி ஆசிரியர்களிற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 411 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், விசேட கல்வி ஆசிரியர் பயிற்சிகளை முடித்த 355 ஆசிரியர்கள் ஏனைய பாடசாலைகள்/வகுப்பறைகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விபரங்கள் வருமாறு.

| | 2014 ஆம் ஆண்டு | |
|---|---|---|
| மாகாணம் | மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை | விசேட கல்வி நியமனத்தைப் பெற்று சாதாரண வகுப்பறைகளில் சேவையாற்றுவோரின் எண்ணிக்கை |
| மேற்கு | 164 | 56 |
| மத்திய | 40 | 36 |

| | | |
|---|---|---|
| தெற்கு | 30 | 69 |
| வடமேல் | 36 | 31 |
| வட மத்திய | 24 | 42 |
| வடக்கு | 51 | 19 |
| கிழக்கு | 28 | 48 |
| ஊவா | 08 | 25 |
| சப்ரகமுவ | 35 | 29 |
| மொத்தம் | 411 | 355 |

**(ஓ) விசேட கல்விப்பிரிவுகளுடன் கூடிய தமிழ் மொழிமூலப் பாடசாலைகள்**

மேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள 38 கல்விப் பிரிவுகளில் 2015 மே 13 ஆந் திகதியில் உள்ளவாறு 161 சிங்கள மொழிமூல விசேட கல்வி பாடசாலைகள் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ் மொழிமூலத்தில் 04 பாடசாலைகள் மாத்திரமே தாபிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், மேல் மாகாணத்திலுள்ள விசேட கல்விப் பிரிவுகளின் மூலம் இவ்வாறான தமிழ் மொழிமூல மாணவர்களின் எண்ணிக்கை எந்தளவு என்பது தொடர்பான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**பரிந்துரைகள்**

(i) ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் விசேட கல்விப் பாடப் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல் மற்றும் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்களை ஒவ்வொரு கல்விப் பிரிவிற்கும் இணைப்புச்செய்யக் கூடிய விதத்தில் ஆட்சேர்த்தல்.

(ii) விசேட கல்வி தொடர்பில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் ஏனைய வகுப்புக்களிற்கும் பாடசாலைகளிற்கும் அனுப்பவைக்கப்படுவதனை தடுத்தல்.

(iii) விசேட கல்விப் பிரிவிகளிற்கு தேவையான ஊனமுற்றோர் உபகரணங்களை போதியளவில் வழங்குதல் மற்றும் சாதாரண பாடசாலைகளில் விசேட கல்விப் பிரிவுகளைத் தாபிக்கையில் முடிந்தவரையில் சக்கர நாற்காலிகள், ஊண்டுகோள்கள் மற்றும் வெள்ளைப் பிரம்புகளை பயன்படுத்தும் மாணவர்களிற்கு வருகைதருவதற்கு இலகுவான முறையில் அவற்றைத் தாபித்தல்.

(iv) அரசாங்க பாடசாலைகளிலுள்ள விசேட கல்விப் பிரிவுகளிற்காக வகுப்பறைகளை பேணுவதற்கு நியமங்களை அறிமுகப்படுத்துதல்.

(v) அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற பாடத்திட்டங்களின் மாற்றங்களிற்காக நடாத்தப்படுகின்ற பயிற்சி நெறிகளிற்கும் கருத்தரங்குகளிற்கும் விசேட கல்விப் பிரிவுகள் மற்றும் குறைநிரப்பு பாடசாலைகளின் ஆசிரியர்களையும் பங்குபற்றச் செய்தல்.

(vi) புலமைப்பரிசில் பரீட்சைக்காகவும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளிற்காகவும் பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிக்கையில் பரீட்சைக்கு தோற்றுகின்ற விசேட தேவையுள்ள மாணவர்களின் உளவியல் மற்றும் ஊனத்தின் தன்மை தொடர்பிலும் பாடங்கள் தொடர்பிலும் அறிவுள்ள மேற்பார்வையாளர்களை நியமித்தல்.

(vii) பிரேல் பாடப் புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தலை முறைப்படுத்தி தேவையான அனைத்து ஆசிரியர்களிற்கும் அவற்றை உரிய வேளையில் பகிர்ந்தளித்தல்.

(viii) மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கின்ற குறைநிரப்பு பாடசாலைகளில் இருக்கவேண்டிய உதவியாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் உரிய விதந்துரைப்புகளைத் தயாரித்து அந்த எண்ணிக்கையினை அனைத்து குறைநிரப்பு பாடசாலைகளிற்கும் வழங்குதல்.

(ix) செவிப்புலனற்ற பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகள் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுவதனால் நியமத்திலமைந்த சமிக்கை மொழியினை அறிமுகப்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

''விசேட தேவையுள்ள மாணவர்களிற்கு கல்வியினை வழங்குவதற்கு மிகப் பொருத்தமான வழிமுறையாக கலப்புக் கல்வி முறையே நவீன ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுள்ளது. இதற்கமைய, எதிர்காலத்தில் விசேட பாடசாலைகள் மற்றும் விசேட கல்விப் பிரிவுகளிற்கு மாணவர்களை அனுப்பவைப்பதற்குப் பதிலாக சாதாரண வகுப்புக்களிற்கு விசேட தேவையுள்ள மாணவர்களையும் அனுப்பிவைத்து அவர்களை கலப்புக் கல்வி முறையில் ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்படும்.''

### 3.2 ஊனமுற்றோர்களிற்காக வழங்கப்படுகின்ற தொழிற் பயிற்சி தொடர்பான அவதானிப்புக்கள்

சமூக சேவைகள் அமைச்சின் கட்டுப்பாட்டிலுள்ள ஊனமுற்றோர் வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### 3.2.1 தொழிற் பயிற்சி கல்வியினை வெற்றிகரமாக பூர்த்திசெய்தல்

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் நடாத்திவரப்படுகின்ற வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையங்களிற்கு பயிலுனர்களை ஆட்சேர்த்தல் மற்றும் அவர்களால் பயிற்சிகளை முடித்து வெளியேறுதல் தொடர்பில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான தகவல்களை பரீட்சிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கைக்கும் வெளியேறிய எண்ணிக்கைக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| தொழில் பயிற்சி நிலையம் | ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | | | 2014 | | |
| | சேர்த்துக் கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை | பயிற்சியினை முடித்தோர் எண்ணிக்கை | வேறுபாடு | சேர்த்துக் கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை | பயிற்சியினை முடித்தோர் எண்ணிக்கை | வேறுபாடு |
| சீதுவ | 123 | 62 | 61 | 107 | 61 | 49 |
| கெடவல | 45 | 03 | 42 | 43 | 11 | 32 |
| வத்தேகம | 79 | 61 | 18 | 110 | 55 | 55 |
| தெழம்புயாய | 66 | 13 | 53 | 110 | 61 | 49 |
| அமுஜனுகும்புர | 55 | 10 | 45 | 56 | 29 | 27 |
| | 368 | 149 | 219 | 426 | 217 | 212 |

மேற்படி தகவல்களின் படி, சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுனர்களில் ஏறத்தாழ 60 சதவீதமானோர் 2013 ஆம் ஆண்டிலும் 49 சதவீதமானோர் 2014 ஆம் ஆண்டிலும் பாடநெறிகளை பூரணப்படுத்தவதற்கு தவறியிருந்தனர். அதாவது, பாடநெறிகளை நடாத்தி தொழில்சார் ஆற்றல்கள் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கம் உரிய விதத்தில் நிறைவேறியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.2 பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை

தொழிற் பயிற்சி நிலையங்களிற்காக அங்கீகரிக்கப்பட்ட மேட்ரன்களின் எண்ணிக்கை 12 ஆன போதிலும், அதில் 08 பதவிகள் 2014 ஆம் ஆண்டு முழுவதும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அது விடுதிப் பராமரிப்பினை உரிய விதத்தில் பேணுவதற்கு தடையாக அமைந்திருந்தது.

### 3.2.3 பயிற்சியினை பூரணப்படுத்திய மாணவர்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காமை

கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியினை முடித்திருந்த மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பயிற்சியினை முடித்திருந்த மாணவர்களிற்கு ஏதேனும் தொழிலொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு திணைக்களம் அல்லது தொழிற் பயிற்சி நிலையம் நேரடியாக தலையீடு செய்திருக்கவில்லை. தொழிலாளர்களிற்கான கேள்விகள் காணப்படுகின்ற நிறுவனங்களிற்கும் இப் பிள்ளைகளிற்கும் இடையே தொடர்பொன்று ஏற்படுத்தப்பட்டிருக்காமையினை உதாரணமாகக் காட்ட முடியும்.

(ii) தொழிற் பயிற்சி நடவடிக்கைகளிற்கான நேரடிச் செலவினமாக 2014 ஆம் ஆண்டினுள் ஏறத்தாழ ரூபா 48,960,889 செலவிடப்பட்டிருந்ததுடன், அத் தொகைக்கு இணையாக ஊனமுற்ற நபர்கள் பெற்றுக்கொண்டிருந்த தொழிற் பயிற்சியினூடாக அவர்கள் பொருளாதார ரீதியில் பலப்படுத்தப்பட்டுள்ளனரா என்பதனை நிச்சயித்து உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

**3.2.4 நிதிகளின் ஏற்பாடு**

மேற்குறித்த அவதானிப்புக்களிற்கமைய, இப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக போதியளவில் நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தமைக்கு அமைய, கடந்த 04 ஆண்டுகளில் திறைசேரியிடமிருந்து வருடாந்தம் கோரப்பட்டிருந்த பெறுமதியில் மீண்டுவரும் செலவினத்திற்காக 17.35 சதவீதமும், மூலதனச் செலவினத்திற்காக 29.12 சதவீதமுமாக நிதிகள் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது விசேட செயற்திட்டங்களிற்காக நிதிகளை கோருகையில் குறித்த தேவைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறு அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையுடன் திறைசேரிக்கு அனுப்பிவைப்பதன் மூலம் நிதிகள் கிடைக்காதிருந்கும் பிரச்சினையினை ஓரளவிற்கேனும் குறைத்துக்கொள்ள முடியுமென்பது அவதானிக்கப்பட்டது.

**பரிந்துரைகள்**

(அ) தொழிற் பயிற்சி நடவடிக்கைகளிற்குத் தேவையான உபகரணங்களை தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) தொழிற் பயிற்சிகளை முடித்துக்கொண்ட மாணவர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பின்தொடர் அறிக்கையொன்றை இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் செல்லும் வரை சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(இ) தொழில் ஆலோசகர் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல்.

**04. முடிவுரை**

(அ) விசேட தேவையுள்ள பிள்ளைகள் காணப்படுகின்ற விசேட கல்விப் பிரிவுகள் மற்றும் குறைநிரப்பு பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சின் மட்டத்திலும் மாகாண கல்வித் திணைக்களங்கள் மட்டத்திலும் செலுத்தப்பட வேண்டிய கவனம் போதியளவில் காணப்படாமையால் அந்தப் பிள்ளைகளிற்கு கல்வியின் சம உரிமைச் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது என முடிவிற்கு வரப்படுகின்றது.

(ஆ) தொழிற் கல்வி நடவடிக்கைகளிற்காக ஊக்கப்படுத்தி பாரிய கிரயத்தை மேற்கொண்டு தமது சொந்தக் கால்களில் எழுத்து நிற்கக்கூடிய தலைசிறந்த சமூகமொன்றை உருவாக்குவதற்காக சமூக சேவைகள் அமைச்சும் திணைக்களமும் மேற்கொண்டுள்ள முயற்சியினை வெற்றியாக்குவதற்காக பின்பற்றப்படுகின்ற பின்தொடர் நடவடிக்கைகள் போதியளிவில் இருக்கவில்லை என முடிவிற்கு வரப்படுகின்றது.